# IN THE COURT OF III ADHOC JUDGE

## City Civil Court Chennai -104

**PW1:Parthasarathy. OS. No.:1976/2023. DATE:12.08.2025**

**குறுக்கு விசாரணை.**

<u>சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

தாவா சொத்தின் முகவரி என்ன என்றால் நம்பர் 3 மற்றும் 4 ராகவய்யா ரோடு, T. Nagar சென்னை 17 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 2 கிரவுண்ட்டுக்கு மேல் இருக்கும். தாவா சொத்தில் பிரதிவாதியானவர் எவ்வளவு இடத்தில் கடை வைத்து நடத்திவருகிறார் என்றால் சுமார் 300 சதுரடியில் கடை வைத்து நடத்திவருகிறார். தாவா சொத்தின் உரிமையாளர் நான் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்தின் உரிமையாளர் எனது சகோதரியான விஜயலட்சுமி என்பவர் ஆவார். அவர் எனக்கு இவ்வழக்கை நடத்துவதற்காக பொது அதிகார பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார். நான் வாதி விஜயலட்சுமி என்பவரின் உடன்பிறந்த சகோதரன் என்பதை நிரூபிப்பதற்காக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்காக வாதி எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை மட்டும் தான் நான் தாக்கல் செய்துள்ளேன். வாதி விஜயலட்சுமி என்பவர் என்உடன்பிறந்த சகோதரி

என்பதற்கு நான் ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் வாதி சார்பாக இவ்வழக்கில் நான் ஆஜர் ஆகி அவருக்காக சாட்சியம் அளிக்க முடியாது என்றும் சொன்னால் அது சரியல்ல. பொது அதிகார பத்திரமானது எந்த தேதியில், எங்கு வைத்து வாதி விஜயலட்சுமி என்பவர் எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் 2006 ஆம் ஆண்டில் சென்னையில் வைத்து எழுதிக்கொடுத்தார். பொது அதிகார பத்திரமான வா.சா.ஆ.1 ஐ வாதியானவர் எனக்கு தாவா சொத்தை பராமரிப்பதற்கும், அதில் இருந்து வருகின்ற வருமானத்தை கவனிப்பதற்காக மட்டும் தான் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா வழக்கை நடத்துவதற்காகவும் வாதி எனக்கு வா.சா.ஆ.1 ஐ எழுதிக்கொடுத்துள்ளார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆனதை தாவா வழக்கை வாதிக்காக நான் இருந்து நடத்துவதற்காக குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் வா.சா.ஆ.1 ல் பத்தி 3 ல் To appear and in all the Courts, Civil, Revenue or Criminal, Whether Original or Appellate side. To take, prosecute or defend all legal proceedings touching any of the matters aforesaid என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வாசகமானது தாவா வழக்கை வாதி சார்பாக நான் நடத்துவதற்கு வாதியால் 2006 ஆம் ஆண்டில் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டு தாவா வழக்கான ஓ.எஸ் நம்பர் 1976/2023 என்ற வழக்கை வாதி சார்பில்

வாதிக்காக நான் அவருடைய பொது அதிகாரம் பெற்ற நபர் ஆக இருந்து நடத்தலாம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு பிரதிவாதியானவர் 2014 ஆம் ஆண்டில் வாடகைக்காக வந்தபோது 2006 ஆம் ஆண்டில் இவ்வழக்கின் வாதியான எனது தங்கை விஜயலட்சுமி என்பவர் ஒரு பொதுஅதிகார பத்திரத்தை தாவா சொத்தை பொருத்து எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்ற விவரத்தை பற்றி பிரதிவாதியிடம் நான் சொன்னேனா என்றால் ஆம் சொன்னேன். மேற்படி விவரத்தை நான் பிரதிவாதியிடம் எழுத்துப்பூர்வமாக சொன்னேனா அல்லது வாய்மொழியாக சொன்னேனா என்றால் அந்த விவரத்தை நான் வாய்மொழியாக தான் சொன்னேன். நான் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன் என்ற விவரத்தை பற்றி பிரதிவாதியிடம் வாய்மொழியாக சொன்னேன் என்ற விவரத்தை பற்றி தாவா வழக்குரையிலும், எனது சத்தியபிரமாணவாக்குமூலத்திலும் என்னால் சொல்லப்படவில்லை என்றும் அதனால் இவ்வழக்கிற்காக வேண்டி தாவா சொத்தை பொருத்து வாதி என்பெயருக்கு வா.சா.ஆ.1 ஆனதை எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை பற்றி பிரதிவாதியிடம் வாய்மொழியாக சொன்னேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. 2006 ஆம் ஆண்டில் வாதியானவர் எனக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகார பத்திரமானது இவ்வழக்கானது 2023 ஆம்

ஆண்டில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்வரையிலும், ஊர்ஜிதத்தில் உள்ளது என்று வாதியானவர் தனியாக Affidavit ஐ இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. வாதி சார்பில் தாவா வழக்கை நான் அவருடைய பவர் ஏஜென்ட் ஆக இருந்து தாக்கல் செய்தப்போது வாதி எனக்கு எழுதிக்கொடுத்த பவர் ஆப் அட்டர்னி பத்திரமானது வாதி தரப்பில் இவ்வழக்கை நான் நடத்துவதற்காக அனுமதித்து உத்தரவு இடவேண்டும் என்று சொல்லி Order III Rule 2 of CPC 1908 ன்படியான இடைநிலைமனுவானது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆம் மேற்படி மனுவானது இடைநிலைமனுஎண் 2/2023 என்று இவ்வழக்கில் எண் கொடுக்கப்பட்டு 7.03.2023 ஆம் தேதி அன்று மேற்படி மனுவானது நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி இடைநிலைமனுஎண் 2/2023 என்ற மனுவில் இவ்வழக்கின் வாதியான விஜயலட்சுமி என்பவர் பிரமாணவாக்குமூலத்தை மனுவிற்கு ஆதரவாக கொடுக்கவில்லை. நான் தான் மேற்படி மனுவில் Affidavit ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் உரிமையாளர் ஆன வாதியான விஜயலட்சுமி என்பவர் தாவா வழக்கை நடத்தாமல் எனக்கு எதற்காக வா.சா.ஆ.1 ஐ எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், வாதி விஜயலட்சுமி என்பவர் அமெரிக்காவில் வசித்துவருகிறார் அதனால் அவரால்

இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி இவ்வழக்கை நடத்தஇயலாத காரணத்தினால் தான் என்பெயருக்கு வா.சா.ஆ.1 ஐ எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி வாதி அமெரிக்காவில் இருந்துவருகிறார் என்ற விவரத்தை பற்றி தாவா வழக்குரையிலும், எனது சத்தியபிரமாணவாக்குமூலத்திலும் என்னால் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2006 ஆம் ஆண்டிற்கு பிறகு வாதியானவர் தோராயமாக அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு எத்தனை முறை வந்து சென்று இருப்பார் என்றால் இரண்டு முறை வந்து சென்று உள்ளார். அவ்வாறு வாதி விஜயலட்சுமி என்பவர் எந்த தேதியில், எந்த மாதத்தில், எந்த ஆண்டில் அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு இரண்டு முறை வந்து சென்றார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 2022 ஆம் ஆண்டில் வாதி விஜயலட்சுமி என்பவர் இந்தியாவிற்கு வந்து சென்றாரா என்றால் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஐ வாதி எனக்கு எழுதிக்கொடுத்தப்பின்பு, வாதியுடன் நான் தொலைப்பேசி மற்றும் கைப்பேசி மற்றும் கடிதம் மூலம் அவருடன் தொடர்புக்கொண்டு பேசியிருக்கிறேனா என்றால் நான் வாதி விஜயலட்சுமி என்பவருடன் கடிதம் மூலம் தொடர்புக்கொள்ளவில்லை, தொலைப்பேசி மற்றும் கைப்பேசி மூலம் அவருடன் நான் பேசி தொடர்புக்கொண்டியிருக்கிறேன். வா.சா.ஆ.1 ஆனது அதன் அசல் பத்திரத்தை தாக்கல் செய்யாமல், வாதி எனக்கு

எழுதிக்கொடுத்த பவர் ஆப் அட்டர்னி பத்திரத்தின் சான்றிட்ட நகலை தான் இவ்வழக்கில் நான் ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் அசல் பத்திரத்தை இவ்வழக்கில் நான் ஏன் தாக்கல் செய்யவில்லை என்பதற்குரிய காரணத்தை பற்றி தாவா வழக்குரையிலும், எனது சத்தியபிரமாணவாக்குமூலத்திலும் சங்கதிகள் என்னால் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ.1ன் அசல் பத்திரத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், இடைநிலைமனு எண் 2/2023 என்ற மனுவில் வாதி விஜயலட்சுமி என்பவர் தனியாக அவருடைய Affidavit ஐ அதில் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 2006 ஆம் ஆண்டு வாதி எனக்கு எழுதிக்கொடுத்த பவர் ஆப் அட்டர்னி பத்திரமானது தாவா வழக்கை 2023 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்வரையிலும் Inforce ல் இருந்தது என்பதனை இவ்வழக்கில் நிரூபிக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் தாவா வழக்கானது நிலைநிற்கதக்கது அல்ல என்றும், ஆதலால் தாவா வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய வழக்காகும் என்றும் சொன்னால் அது சரியல்ல. பார்த்தசாரதி ஆகிய வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆகிய எனக்கும், பிரதிவாதிக்கும் இடையில் தாவா சொத்தை பொருத்து கட்டிட உரிமையாளர் மற்றும் வாடகை தாரர் என்ற உறவுமுறை கிடையாது என்றும், அதன் அடிப்படையில் தாவா வழக்கானது

தள்ளுப்படி செய்யப்படவேண்டிய வழக்காகும் என்றும் சொன்னால் அது சரியல்ல. தாவா சொத்தை பொருத்து வாதியான விஜயலட்சுமி என்பவருடனும், பார்த்தசாரதி ஆகிய வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆக என்னுடனும் பிரதிவாதியானவர் எழுத்துப்பூர்வமான வாடகை ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சாட்சியானவர் தாமாகமுன்வந்து Temporary Tenancy Affidavit ஐ பிரதிவாதியானவர் வாதி விஜயலட்சுமிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதில் தாவா சொத்தில் இருந்து பிரதிவாதியானவர் நீதிமன்ற தீர்ப்பு முடிந்தவுடன் தாவா சொத்தில் இருந்து வெளியேறிவிடுவதாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் கூறுகிறார். 2014 ஆம் ஆண்டில் பிரதிவாதியானவர் வாதி விஜயலட்சுமி பெயருக்கு Temporary Tenancy Affidavit ஐ எழுதிக்கொடுத்தார். மேற்சொன்னவாறு பிரதிவாதியானவர் வாதி விஜயலட்சுமி பெயருக்கு எழுதிக்கொடுக்கும்போது அந்த இடத்தில் யார், யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் சுமார் 10 வாடகைதாரர்கள் அந்த இடத்தில் இருந்தார்கள். Temporary Tenancy Affidavit ல் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் அது பற்றி மேற்படி ஆவணமானது 2014 ஆம் ஆண்டில் எழுதிக்கொடுத்துள்ளப்படியால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் வாதி விஜயலட்சுமினுடைய

கையொப்பம் அதில் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ 3 ஆனதை பிரதிவாதியானவர் விருப்பப்பட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், அவரை நாங்கள் கட்டாயப்படுத்தியதால் தான் அவர் அதனை எழுதிக்கொடுத்தார் என்றும் சொன்னால் அது சரியல்ல. வா.சா.ஆ.3 ல் பிரதிவாதியானவர் எழுதிக்கொடுத்துள்ளதில் எந்த தேதியில் தாவா சொத்தில் இருந்து தான் வெளியேறி காலி செய்துக்கொடுப்பதாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் குறிப்பிட்டு தேதி, மாதம், ஆண்டு பற்றி அவரால் எழுதிக்கொடுக்கவில்லை, ஆனால் Court Ruling முடிந்தவுடனோ அல்லது பிரதிவாதிக்கு வாடகைக்கு புதிய கட்டிடம் கிடைத்தவுடனோ தாவா சொத்தில் இருந்து வெளியேறி காலி செய்துக்கொடுப்பதாக கண்டு எழுதிக்கொடுத்துள்ளார்.

(பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டி கேட்டுக்கொண்டதற்க்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இச்சாட்சியின் சாட்சியம் இத்துடன் நிறுத்தி ஒத்திவைக்கப்படுகிறது.)